N. T. H.

நிராம்சமே நாம்

# பிரஹ்மஸ்ரீ
# ஷெய்கு நெய்னு முஹம்மது
## (தாளையான் சுவாமி)
## ஞானதேசிகர் அவர்களின்
## சரித்திரச் சுருக்கம்

---


இஃது

**8-வது வருடக் கந்தூரி-குருபூசையன்று**
**தாளையான் புக்கரா (சாதுக்கள்) டிரஸ்டின்**
**அன்பளிப்பு**

தாளையான் அச்சகத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.
8-5-1963.

597.P

920



பிரஹ்ம ஸ்ரீ ஷெய்கு நெய்னு முஹம்மது
(தாளையான் சுவாமி)

கடவுள் ஒரு வஸ்துவோடும் கலந்ததில்லை
கடவுளோடு ஒரு வஸ்துவும் கலந்ததில்லை
கடவுளைத் தவிர ஒன்றுமில்லை
இந்த நிர்ணயம் உடையவரே என் கூட்டத்தவர்.

(தாளையான்.)

N. T. H.

ஸ்ரீ சற்குரவேநம:

தாளையான் திருவடி வாழ்க!

# கொழும்புமாநகர் கஞ்சத்தாளையான் மரபின் கண்ணிலவும் திருவருட்பிரகாச வள்ளலாராகிய

## தரீக்குஸ் ஸிர்ரியா அல்லது ஆத்மார்த்த அந்தரங்க வழியின் ஸ்தாபகருமான

# பிரஹ்மஸ்ரீ ஷெய்கு நெய்னா முஹம்மது (தாளையான் சுவாமி)

# ஞானதேசிகர் அவர்களின் சரித்திரச் சுருக்கம்.

---

**த**வராஜ சிங்கங்களில் ஒருவரான பிரஹ்ம ஸ்ரீ தாளையான் ஆண்டகை ஷெய்கு நெய்னா முஹம்மது மஸ்தான் பாவா அவர்கள் இராமநாதபுரம் ஜில்லா, நம்புதாளை என்னும் ஊரில் **கனம் முஷ்யித்தீன் அப்துல்காதிர் - மீராநாச்சியார் உம்மா** ஆகியோருக்கு அருந்தவப் புதல்வராய் அவதரித்தார்கள்.

**மௌலல் கௌம் ஷெய்கு நெய்னா முகம்மது மஸ்தான் பாவா** அவர்கள் உதயமாகு முன்னமே தமது தந்தை காலவியோகமடைந்து விட்டபடியால் அருமை மாதாவால் போஷிக்கப்பட்டு வந்தார்கள். குருநாதர் தமது பெற்றோருக்கு ஏகப்புத்திரராக இருந்தபடியால் அவர்களுக்குத்திருமணம் செய்து கண்ணாரப் பார்த்து மகிழவேண்டுமென்று வலியுறுத்திய அவரது தாயாரை நோக்கி, எனதருமை மாதாவே நான் திருமணம் செய்து கொள்ளக்கூடிய பருவத்தை இன்னுமடையவில்லை. அந்தக்காலம் வரும்போது தாங்கள் ஜீவித்திருந்தால், அதைச்செய்து கொள்ளலாம் என்று விடைபகர்ந்து கொழும்பு போக உத்தரவு கேட்டார்கள்.

**மகனின்** இவ்வருமையான வார்த்தையை மகிழ்வோடு செவியேற்ற மாதா அவர்கள் மகனை வாழ்த்திப் போற்றி மகிழ்வோடு கொடுத்த அனுமதிப்படி சிலோன் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு சிலகாலம் தங்கி இருந்து, அதன்பின் தாயகம்திரும்பி முன்னைய வழக்கம்போல நேரே தொண்டிக்குச் சென்று, அங்கு அடக்கமாகி இருக்கும் மௌனகுரு **ஷெய்கு மஸ்தான் ஆரிபுபில்லாஹ்** அவர்களின் தர்கா ஷரீபில் தங்கி தியானத்தில் இருக்கும்போது, அச்சன்னிதியிலிருந்து இவர்களை நோக்கி '**'உன்தாயார் சந்தூக்கில் வருகிருள் ஓடு**'' என ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அச்சப் தத்தை இவர்கள் பொருட்படுத்தாமல் மௌனமாகவே இருந்தார்கள் உன் தாயாரின் சந்தூக்கு நெருங்கிவிட்டது உடனே ஓடுக என்று மீண்டும் தொனி உண்டாயிற்று. அதையும் செவி மடுக்காதவர் போல் இருக்கும்போது, மூன்ரும் முறையாக உரத்த தொனியில் வலியுறுத்தி **''சீக்கிரம் ஓடடா''** என்னும் சப்தத்தோடு கன்னத்தில் ஓர் அடியும் விழுந்தது.

இத்தனைக்குப் பிறகு **திரு ஷெய்கு நெய்னு முஹம்மது பாவா** அவர்கட்குத் தெளிவுண்டாகித் தம்மிருப்பிடம் விட்டெழுந்து, ஒருமைல் தொலைதூரத்திலுள்ள தமது பிறப்பிடமாகிய நம்புதாளையை நோக்கி விரைந்தோடினுர்கள், இதனிடையிலிருக்கும் (கபுருஸ்தான்) அடக்க ஸ்தலத்தில் தனது தாயாரின் திருமேனி வைக்கப்பட்டுவிட்டது. அதைக்கண்ட இவர்கள் நிலை தடுமாறி ஆவேசமுற்றவர்களாய் தாமும் கபுரினுள் விழுந்துவிட்டார்கள். இப்பரிதாபகரமான செயலைக் கண்ட இவர்களது சுற்றத்தார் இவ்வருமைமிகு வாலிபரைத் தூக்கி எடுத்து வெளியிற் சேர்த்தனர்.

அதற்கப்பால் தம்மில்லத்தில் தங்கி பாத்திஹா வகையருக்களை நிறைவேற்றியபின், தாயாரின் பிரிவால் மனம் வெதும்பியவர்களாய் ஊரைவிட்டு வெளியேறி பற்பல இடங்களில் சுற்றித்திரிந்து பண்டையகாலக் காற்ருட்டிக்கப்பலொன்றில் சிப்பந்தியாக வேலையி லீடுபட்டுக்கொண்டிருக்கும் சமயம், கப்பலின் மேலதிகாரியானவர் மஹான் தாயுமான சுவாமி அவர்களின் பாடலைப்பாடிக்கொண்டிருந் தார். அதைக்கூர்ந்து செவியேற்றுக்கொண்டிருந்த **திரு ஷெய்கு நெய்னு முஹம்மது** மஸ்தான் அவர்கள் மேலே நோக்கி, **அடே நீ பாடுவது தப்படா** என்று கூறி அப்பாட்டை முறையோடு உரத்த தொனியில் பாடினுர்கள். அதைக்கேட்ட அவ்வதிகாரி இவர்களைக் கூவியழைத்து தம்மருகிலமர்த்தி அப்பாடலை மீண்டும் பாடச்சொன்னுர்.

அதனைப் பேரானந்தத்தோடு செவியேற்ற அதிகாரி இவர்களுக்கு வேலையொன்றும் கொடாமல் தன்னுடன் வைத்திருந்து இவர்களின் விருப்பப்படியே மீண்டும் கொழும்புக்கு அனுப்பிவைத்துவிட்டார்.

கொழும்பில் பல வருஷங்கள் தங்கி வர்த்தகத்தில் ஈடுபட்டு முன்னேறிக்கொண்டு இருக்கும்போதுதான் ஞானமார்க்கத்தில் உய்ய வேண்டுமென்ற பெரியதோர் ஆர்வம் ஏற்பட்டது. அப்பால் எங்கேனும் ஓர் மஹானின் சன்னிதானத்தை அடைந்து தனித்திருக்க வேண்டுமென்ற அவாப்பூண்டவர்களாய் தமது வர்த்தகத்தொடர்புகள் யாவையும் வெறுத்துத்தள்ளிவிட்டு, கொழும்பிலிருந்து யாத்திரையாகி முத்துப்பேட்டை **ஹக்கீமுல் ஹுக்கமா ஷெய்கு தாவூத் ஒலி நாயகம்** அவர்களின் திருச்சன்னிதியில் வந்து சேர்ந்தார்கள்.

ஆங்கு **அக்கரை இராவுத்தர்** எனும் பெரியாரைச் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிட்டியது. அவ்வமயம் **இராவுத்தர்** அவர்கள் இவர்களை ஆதரித்து தமது ஆண்டகை அவர்களின் முன்அறிவிப் பின்படி என்னுடைய அந்திய காலம் நெருங்கிவிட்டது. நீங்களும் வந்துவிட்டீர்கள். அடுத்து வரும் ஜமாதுல் அவ்வல் பிறை ஒன்றில் ஆண்டகை அவர்களின் கந்தூரி ஆரம்ப நாளன்று நான் தேக வியோகமாகி விடுவேன். நாமிருவரும் ஒரே நோக்கமுடையோராக இருப்பதால் நீங்கள் என்னோடு இருந்து என் மரணச்சடங்குகளை நிறைவேற்றிவிட்டு, இந்தக் குடிசையிலேயே தங்கி இருந்து மேன்மை தங்கிய ஆண்டகை அவர்களின் கிருபா கடாட்சங்களைப்பெற்று ஆனந்த நிலையடைவீராக என்று கூறி மஹான் **ஷெய்கு தாவூத் ஆண்டகை** அவர்களின் மகத்துவத்தைப்பற்றியும் அங்கு தாமடைந் துள்ள பாக்கியங்களைப்பற்றியும் எடுத்துக்கூறி இருவரும் நீண்ட சம்பாஷணை செய்தனர்.

மேலே கூறப்பட்டுள்ளபடி ஜமாதுல் அவ்வல் பிறை ஒன்றில் **இராவுத்தர்** அவர்கள் தேகவியோகமடைந்துவிட்டார்கள். அவர்களுக் குரிய மரணச்சடங்குகளைக் குறைவின்றிச்செய்து நல்லடக்கம் செய்த பின், அதே குடிசையில் **நீரு ஷெய்கு நெய்னு முகம்மது** மஸ்தான் பாவா அவர்கள் பன்னிரண்டு வருஷகாலம்வரை தங்கி இருந்து ஐங்காலத் தொழுகை, நோன்பு போன்ற **ஷரீஅத்** விதிகளை வழுவாது அனுஷ் டித்தவர்களாய் வாய் பேசா மௌனயோகியாகவே இருந்தார்கள். அப்பன்னிரண்டு வருஷகாலங்களுக்கிடையில் தமக்கும் மேன்மைக் குரிய குத்துபு நாதர் **ஷெய்கு தாவூது** ஆண்டகை அவர்கட்கும்

இடையில் நிகழ்ந்துள்ள அற்புதக்காரணைநிகளேப்பற்றிய அவர்களின் திரு வாய்மொழிகளில் சிற்சில நிகழ்ச்சிகளை மட்டும் கீழே விபரிக்கின்றோம்.

கண்ணியமிக்க **ஷெய்கு நெய்னு முஹம்மது மஸ்தான்** அவர்கள் தவத்தில் ஸ்திர நிலைபெற பகலெல்லாம் நோன்பும், இரவெல்லாம் வணக்கமும் புரிபவர்களாகவும் மக்களெல்லாம் அயர்ந்து நித்திரை போனபின் அர்த்த சாமத்தில் ஆண்டகை அவர்களின் தர்கா திருவாயில் முன்பு அமர்ந்திருந்தவர்களாகவும், நின்றவர்களாகவும் இரவு பூராவையும் கழிப்பார்கள். இடையிடையே தன்னை அறியாமல் நித்திரை வந்து மயக்கும்போது சன்னிதியினுள்ளிருந்து **அடே!** என்ற சத்தம் கேட்குமாம். அதைக்கேட்டு மீண்டும் தவநிலையிலிருக்கும் சமயம் இரண்டாம் முறையாக தூக்கம் வந்தமுக்கும் போது முன்போன்றே **அடே!** என்றொரு அசரிரி கேட்டதும் திடுக்குற்றவர்களாய்த் தெளிவடைந்து நிலையைச் சீர்படுத்தியிருக்குங்கால் மறுபடியும் அப்படியே உறக்கம் வந்தாழ்த்துந்தறுவாயில் மூன்றும் முறையாக **அடே!** என்ற அதட்டலோடு **கன்னத்தில் ஓர் அறையும்** விழுமாம். இவ்வாக்கினைக்குப்பிறகு தலைவிரிகோலமாய் ஓடோடி எதிரிலிருக்கும் **ஷிபாகுண்டாவென்ற** திருக்குளத்தில் விழுந்து நீராடி தூக்கத்தைப் போக்கிவிட்டு சன்னிதியில் வந்திருப்பார்கள். இப்படியே பல்லாண்டுகளாக ஊண் உறக்கம் உலகத்தின் வேறு சுகபோகங்கள் யாவையும் வெறுத்தொதுக்கிவிட்டு ஹஸரத் ஆண்டகை அவர்களின் திருவடியே தஞ்சமென நாடிக்கிடந்தார்கள்.

மேற்கண்டவாறிருக்கும் போது ஓரிரவு கௌதுல் அஃலம் முஹிய்யித்தீன் அப்துல்காதிர் ஜிலானிருத்திஸ ஸிர்ருஹு அவர்களைத் தரிசிப்பதற்காக பகுதாதுக்கேகவேண்டுமென ஆண்டகை அவர்களின் திருவடியில் வேண்டுகை செய்துகொண்டே இருந்தார்கள். அப்போது **"பகுதாதைக்காட்டுவோம்"** என்றொரு தொனி கேட்டது பின்னோரிரவு **ஷெய்கு நெய்னு முஹம்மது** பாவா அவர்கள் தூக்கத்திலிருக்குங்கால் அவர்கள் சொற்பனத்தில் இதோ பகுதாதைப்பாரும் என்றொரு பெரியாரின் வாக்குக் கேட்டது. அவ்வமயம் இவர்களின் குடிசைக்கு மேல்புறத்தில் காணப்படும் ஒற்றைக்கால் மண்டபத்தில் பல பெரியோர்களின் மத்தியில் அமர்ந்திருக்கும் வடிவழகுமிக்க பெரியாரை நோக்கி நானும் தங்கள் சமுகம் வரவேண்டுமே என்று இரந்து கேட்டதற்கு இதோ பக்கத்தில் காலியாக இருக்கும் ஆசனம் உமக்குரியதுதான், என்றாலும் வருஷம் பன்னிரண்டு ஆகவேண்டும் என மறுமொழி பகர்ந்தார்கள்.

பிறிதொரு நாளிரவு ஷெய்கு நெய்னு முஹம்மது பாவா அவர்கள் துயில் கொண்டிருக்கும் போது பெரியாரொருவர் இவர்களின் சொற்பனத் திற்றோன்றி இவர்களை அழைத்தவர்களாய் அப்பெரியார் முன் நடக்க இவர்கள் பின் தொடர்ந்தவர்களாய் சில தூரம்போனதும் பெரியார்நடையை இவர்கள் தொடர முடியாமல் அவருக்குப்பின் னால் ஓடிக்கொண்டிருந்தார்கள். இப்படியே சில தூரம் சென்றபின் ஓடிவந்த ஷெய்கு நெய்னு முஹம்மது பாவா களைத்து வாடிவிட்டதைக் கிருபையோடு கவனித்த அப்பெரியார் தமது சோழியப்பையிலிருந்த குடுக்கையைத்திறந்து அதனுள்ளிருந்த ஒப்புவமை கூறமுடியாத பானத்தை இவர்கள் வாயில் ஊற்றினார்கள். அதைப்பருகி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினவர்களாய் அதிவிரைவோடு நடந்தார்கள். ஆரம்பத்தில் இவர்களுக்கு முன் வழிகாட்டியாக நடந்து சென்று ஷர்பத்தை நல்கிய அந்தப்பூமான் இவர்களுக்குப்பின்னால் நடந்தார் களெனினும், முன்பேர்கும் வாலிபரைத் தொடர முடியாமல் இப் பெரியார் ஓடிச்செல்ல வேண்டியதாயிற்று. இவ்வாறான காட்சிக் குப்பின் திரு ஷெய்கு நெய்னு முஹம்மது பாவா அவர்களுக்குப் பெரிய தோர் சக்தியும் இன்பநிலையும் உண்டாகிவிட்டது.

இம்மாதிரி எண்ணமுடியாத எத்தனையோ அற்புதக்காட்சி களைக் கண்டு தெளிந்து பன்னிரண்டாம் ஆண்டின் இறுதியில் தமது சொற்பனத்தில் கம்பீரத்தோற்றமுடைய பக்கீர் (சன்னியாசி) ஒருவர் உதயமாகி இவர்களை நோக்கி, உமது தவம் முடிந்துவிட்டது எனவே இதோ குவிக்கப்பட்டிருக்கும் பொற்குவியலை அள்ளிக் கொண்டு போகலாம் என்றுரைத்தார்கள். அவ்வசனத்தைக்கேட்ட இவர்களுக்குக் கோபமுண்டாகி இவ்வுலகப்பொருள் அனைத்தும் துச்சம், எனக்குத் தேவை இல்லையென்று அலட்சியமாக மறுமொழி கூறிவிட்டார்கள். உடனே அப்பெரியார் இவர்களைக்கட்டியணைத்து முத்தமிட்டு தேவாமிர்தம் போன்ற குடிப்பைப் புகட்டியதோடு பல இரகசிய அறிவுகளையும் போதித்து மறைந்தார்கள். அதன்பின் முத்துப்பேட்டையை விட்டு வெளியாகிச் சிலகாலம் நாகூர் ஆண்டகை அவர்களின் தர்காஷரீபில் இருந்து, அதற்கப்பால் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். கொழும்பில் தாளையான் பிரின்டிங் வொர்க்ஸ் என்ற அச்சகத்தை ஸ்தாபிதம் செய்து பக்கீர்களுக் கும் சன்னியாசிகளுக்கும் வாசஸ்தலமாக அமைத்துதவினார்கள். இன்னும் பல தொழில்களுக்கும் உரிமையாளராக இருந்து அத்தொழில்களை செவ்வையாக நடப்பித்துக்கொண்டிருக் குங்காலத்து, ஹிஜ்ரி 1374. துல்ஹஜ்ஜுப் பிறை 14 க்கு

சரியாகிய 3-8-1955 புதன்கிழமை காலை 9-30 மணியளவில் முன் அறிவித்தல் செய்திருந்ததற்கேற்ப தங்களது அரவணைப்பில் வைத்திருந்த பக்கீர்களுடனும், சன்னியாசிகளுடனும் வெகு ஆனந்தமாக உரையாடிக்கொண்டிருக்குஞ் சமயம் பரிபூரண நிலையென்னும் மகாசமாதியை அடைந்தார்கள்.

இறுதிக்கிரியைகளைக் குறைவின்றிச் செய்து பன்னூற்றுக் கணக்கான மக்கள் புடை சூழ கொழும்பு ரத்மலானை கந்தவளை என்னுமிடத்தில் ஆலிஜனாப் அல்ஹாஜ் முகம்மது பலீல் அப்துல் கபூர் அவர்களால் நன்கொடை அளிக்கப்பெற்ற பூங்காவில் இம்மஹானின் புனிதவுடல் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. அவர்களின் சமாதிபீடம் சிறந்து விளங்குகிறது.

---

மிகவுமே விரக்தனானோன் மேவுவன் சமாதி தன்னைப்
புகழ் சமாதியை யடைந்தோன் பொருந்துவன் றிடபோதத்தை
இகழ் விலாப் போதமுற்றோன் எய்துவன் முத்திதன்னைத்
தகமைசேர் முத்தனென்றுந் தடையிலானந்த முண்பன்

நிலைபெறு ஞானமுற்று நிரந்தர வின்பம் பெற்று
வலைவுறு சகமறந்திங் கமர்ந்தவன் சீவன் முத்தன்
சலமென விருத்தி கெட்டுஞ் சாக்கிர முற்றோனாகி
இலகு சாக்கிரமு மின்றி யிருப்பவன் சீவன்முத்தன்.

—(விவேகசூடாமணி)

(இதன் ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்பும், குருநாதர் அவர்களின் (கருமாத்துகள்) அற்புதச்செயல்களும், அனுபவநிலைகளும் பொன்மொழிகளும், நிறைந்த விரிவான நூல் தாளையான் புகாரா (சாதுக்கள்) டிரஸ்டால் அதிவிரைவில் வெளியாகும்.)

---

இச்சரிதைச் சுருக்கத்தை சமீபத்தில் வெளியாக இருக்கும் முத்துப்பேட்டை ஷெய்கு தாவூது ஆண்டகை அவர்களின்—கஷ்புல் கருமாத்து என்ற—காரண சரிதையிலும் காணலாம்.

---

சுபம்! சுபம்! சுபம்!

உனக்காக என் பேரில்
கோபமாகாதே.
எனக்காக உன் பேரில்
கோபமாகு
7.6.67

Printed by
Thalayan Printing Works
178, Dam Street,
Colombo-12.